**அதுரலிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூலை 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து அதுரலிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,687,096 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வழங்கள் மற்றும் உபகரண செலவு ரூபா 1,538,939 தொகையினை ரூபா 506,166 தொகையென காட்டப்பட்டிருந்தமையால், மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,032,743 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 3,233,679 தொகைக்கான மூலதனச் செலவுகள் ரூபா 8,659,716 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால், மூலதனச் செலவு ரூபா 5,426,037 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மூலதன உதவி கடன்பட்டோர் ரூபா 3,202,771 தொகையினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) 05 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய மூலதனச் செலவு ரூபா 2,884,913 தொகையினால் மற்றும் பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 3,560,874 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒவ்வொன்று சமமாக இருக்க வேண்டிய நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்குகளின் மீதிகள் இடையே ரூபா 889,359 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டிற்கான வருமானக் கூட்டுத்தொகை ரூபா 609,133 தொகையால் மிகையாகவும், செலவுகளில் கூட்டுத்தொகை ரூபா 6,133,246 மிகையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 10,409,491 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி மற்றும் அதற்கு உரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே கூட்டுத்தொகை ரூபா 4,106,266 இற்கான ஒப்பற்ற தன்மை காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 7,152,840 தொகைக்கான மூலதன உதவி கடன்கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 150,000 தொகைக்கான மீதி அடங்கியிருந்தன.

(ஆ) பிரதேச சபைகளை நிறுவிய போது உரித்தாக்கப்பட்ட ஆதனங்களுக்காக அக்குரஸ்ஸ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 675,577 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 102,733,132 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக உருத்துறுதி, நாளது வரையாக்கப்பட்ட மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பற்றிய கணிப்பீட்டு சபை அறிக்கையும், கூட்டுத்தொகை ரூபா 15,907,617 தொகைக்கான நிலுவை வருமானக் கணக்கின் மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 7,152,840 தொகைக்கான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான அட்டவணைகளும் கூட்டுத்தொகை ரூபா 1,121,281 தொகைக்கான வங்கி மீதி தொடர்பான மீதியை உறுதிப்படுத்தல் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் 2 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 830,424 தொகைக்கான 69 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,661,952 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,182,783 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,520,831 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 86.97 சதவீதத்தை மிகைத்த மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்ததுடன் வருமான உதவிகள் கிடைக்காவிடின் சுயமாக உருவாக்கிய மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்விதத்திலும் இயலாது போகும் என கடந்த மூன்று வருடங்களிலும் காட்டியது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீதவரி மற்றும் வரி**

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 853,486 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 611,970 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,465,456 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 614,252 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 851,203 தொகைக்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 48,412 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 12,345 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 60,757 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 21,753 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 39,004 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(இ) வாடகை**

ஆரம்ப நிலுவை ரூபா 44,130 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,960,000 இற்கான சிட்டையிடலுடன் ரூபா 3,004,130 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,991,727 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 12,403 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.3 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 14,223,187 தொகை பெற வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை மதிப்பீடு**

2016 ஆண்டிற்கான மதிப்பீட்டு மூலதன செலவு ரூபா 121,064,000 தொகையாக இருந்த போதிலும், உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 8,832,259 தொகை எனப்படும் மதிப்பீட்டுப் பெறுமதியில் 7.29 சதவீத அளவான குறைந்த பெறுமதியே காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 4 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 11 மிகைப் பதவியினரை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 11,361 தொகைக்கான நிலுவை கடை வாடகையினை அறவீடு செய்வதற்காக 2008 ஆகஸ்ட் 19 திகதி முதல் சபையினால் ரூபா 38,675 தொகைக்கான சட்டத்தரணி கட்டணம் செலுத்தியிருந்த போதிலும் நிலுவைத் தொகை கணக்காய்வுத் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவிற்கு இணங்காமல் பதவியணியினர் நலன்புரி சங்கத்தின் விடயங்களுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 100,000 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்தது.

(இ) ஏல விற்பனை காணிகளில் இருந்து பொது வசதிகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய காணியின் அளவு 78.53 பர்சஸ் எனினும் வழங்கியிருந்த காணியின் அளவு 56 பர்சஸ் மாத்திரம் என்பதினால் அக் காணியின் விற்பனைப் பெறுமதியின் மீது சபைக்கு ரூபா 506,926 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) 2015 ஏப்ரல் 01 திகதி சபைக்கு கிடைத்திருந்த 56 பர்சஸ் காணி எந்த பயன்தரு விடயத்துக்கும் ஈடுபடுத்தப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 3,069,218 கிரயத்தையுடைய 03 டிரக்டர் வண்டிகள் 10 வருடங்களை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அதனை பழுதுபார்து ஓடுவதற்கும் அல்லது பயன்படுத்துவதற்கும் 2015 ஜூலை 10 திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 ஜூலை 21 ஆம் திகதி நகர சபைக்கு கிடைத்திருந்த ரூபா 24,928,666 தொகைக்கான மோட்டார் கிரேட்டர் இயந்திரம் அத்திகதி முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**3.5 ஒப்பந்த நிருவாகம்**

மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் பிரகாரம் பல்வேறு ஏற்பாடுகள் மற்றும் சபை நிதியத்தின் கீழ் ரூபா 119,951,000 தொகைக்கான 130 வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ஒரு வேலைத் திட்டமும் நிறைவேற்றியிருக்கவில்லை. எனினும், ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த ரூபா 6,653,660 தொகைக்கான 16 நிர்மாண வேலைகள் ஏனைய ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பை சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,639,916 தொகை மற்றும் கடந்த 05 வருடங்களில் ரூபா 16,466,490 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட குப்பையினை மதிப்பீடு செய்தல் மற்றும் வகைப்படுத்தல் இன்றி தனியார் காணியொன்றிற்கு அகற்றப்படுகின்றது.

(ஆ) 1533/16 ஆம் இலக்க 2008 ஜனவரி 25 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

### 3.7 சுற்றாடல் சார் தாக்கங்கள்

2008 ஜனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 32 நிறுவனங்களின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காமையால் சபைக்கு ரூபா 140,800 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய பிரதிகூலமான தாக்கங்களுக்கு எதிராக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 6,415,605 தொகைக்கான சேமிப்புகளும், 04 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,773,796 தொகையாகக் காணப்படுகின்றமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 371,721 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்